OPEN ACCESS

Manuscript ID:
TAM-070420236083

Volume: 7

Issue: 4

Month: April

Year: 2023

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 05.01.2023

Accepted: 22.03.2023

Published: 01.04.2023

Citation:
Chandiran, A. "'Pudiya Veielum Neelakadalum' Navalil Vazhvin Etharththangal." *Shanlax International Journal of Tamil Research,* vol. 7, no. 4, 2023, pp. 66–74.

DOI:
https://doi.org/10.34293/tamil.v7i4.6083

*Corresponding Author:
chandran@shctpt.edu

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# "Pudiya Veielum Neelakadalum" Navalil Vazhvin Etharththangal

**A. Chandiran**
*Assistant Professor, Tamil PG and Research Department*
*Sacred Heart College (Autonomous), Tirupathur, Tamil Nadu, India*
*https://orcid.org/0000-0002-8884-3285*

**Abstract**
On the one hand, it is to live that life is to live. On the other hand, it is to make a commitment to live this way and not to deviate from it. We can see that the way of life of man lies behind these contradictory principles. As Kierkegaard puts it in his book Either / or, it is as if man's life is an ethical life and an aesthetic life. That is to say, it is the reality of human life to experience every moment the various existences of joy, sorrow, hatred, sadness, misery, etc., as life is conducted in the context of unexpected twists and turns, problems and struggles. A copy of such realities is the novel ' pudiya veielum neelakadalum (The New Sun and the Blue Sea). With two central characters, Ashokarajan and Latha, this article presents a glimpse into the realities of human life that are intertwined with the story of the novel.

**Key Words:** Pudiya Veielum Neelakadalum, Noval, Soren Kierkegaard, Either / or Tamil Novel, Criticism.

**References**

1. Jamalon. 2018. *Pirathiel Kilaikum Bimbangal*, (First Edition), Chennai, Timeline Publishing.
2. Nijanthan, 2008. *Pudiya Veyilum Neelakadalum*, (First Edition), Chennai, Kaavya Veliedu.
3. Paul Michal Foucault, Adikarathin nun arasiyal, Suresh. M.G. 2017. (Second Edition), Adaiyalam Pathipakam, Puthanatham, Tiruchi.
4. Rajadurai S.V. & Iruthliyamum Marksiyamum. 2011. (First Edition), Coimbatore, Vidiyal Padippkam.
5. Suresh.M.G. & Isangal Aairam. 2017. (First Edition), Tiruchi, Adaiyalam Pathipakam, Puthanatham.
6. Thamizhavan & Padaipum Padaippalium. 1989. (First Edition) Kavya, 16th & 17th E-Cross, Indira Nagar, II Stage, Bangalore.
7. Thamizhavan & Tamilum Mozhithal Kotpadum. 2019. (Second Edition), Palayamkottai, Melum Veliedu.

# 'புதிய வெயிலும் நீலக் கடலும்' நாவல் புனைந்திடும் வாழ்வின் எதார்த்தங்கள்

***முனைவர் ஆ. சந்திரன்***
தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்
தூயநெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர்

***ஆய்வுச்சுருக்கம்***
*வாழ்க்கை வாழ்வதற்கு என்று வாழ்வது என்பது ஒருபுறம். இப்படித் தான் வாழ்வது என்று ஓர் உறுதிப்பாட்டை ஏற்படுத்திக்கொண்டு அதிலிருந்து விலகாமல் வாழ்வது என்பது மறுபுறம். இவ்வாறான முரண்பட்ட கொள்கைகளின் பின்புலத்தில் மனிதனின் வாழ்க்கை முறை அமைந்திருக்கிறது. எதிர்பாராத திருப்பங்கள், சிக்கல்கள், போராட்டங்கள் என்ற பின்புலங்களில் வாழ்க்கையை நடத்துவதால் மகிழ்ச்சி, துக்கம், வெறுப்பு, சோகம், அவஸ்தை, முதலான பல்வேறு இருப்புக்களை ஒவ்வொரு கணமும் அனுபவிப்பது மனிதவாழ்வின் எதார்த்தமாகும். எதார்த்தங்கள் நிறைந்த பிரதியாக "புதிய வெயிலும் நீலக் கடலும்" நாவல் உள்ளது. அசோகராஜன் – லதா என்ற இரு மையப் பாத்திரங்களைக்கொண்டு நாவலின் கதைப் பின்னிப்பினணந்துள்ள மனிதவாழ்வின் எதார்த்தங்களைக் குறித்த பார்வையை முன்வைக்கிறது இக்கட்டுரை.*
***முக்கியச்சொற்கள்:*** *புதிய வெயிலும் நீலக் கடலும், நாவல், ஸோரன் கீர்க்கேகார்ட், தமிழ் நாவல், விமர்சனம், எதார்த்தம், தமிழ்நாவல், விமர்சனம்*

**முன்னுரை**

எதிர்பாராத திருப்பங்கள், சிக்கல்கள், போராட்டங்கள் என்ற பின்புலங்களில் வாழ்க்கையை நடத்துவதால் மகிழ்ச்சி, துக்கம், வெறுப்பு, சோகம், அவஸ்தை, முதலான பல்வேறு இருப்புக்களை ஒவ்வொரு கணமும் அனுபவிப்பது மனிதவாழ்வின் எதார்த்தமாகும். வாழ்க்கை வாழ்வதற்கு என்று வாழ்வது என்பது ஒருபுறம். இப்படி தான் வாழ்வது என்று ஒரு உறுதிப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டு அதிலிருந்து விலகாமல் வாழ்வது என்பது மறுபுறம். இவ்வாறான முரண்பட்ட கொள்கைகளின் பின்புலத்தில் மனிதனின் வாழ்க்கை முறை அமைந்திருப்பதைப் பார்க்கலாம். ஸோரன் கீர்க்கேகார்ட் தன்னுடைய நூலான இது / அது (Either / or) என்பதில் கூறுவது போல மனிதனின் வாழ்க்கை என்பது அறவியல் வாழ்க்கை மற்றும் அழகியல் வாழ்க்கை என்பது போலத்தான் இது அமைகிறது.

அசோகராஜன் - லதா என்ற இரு மையப் பாத்திரங்களைக்கொண்டு நிஜந்தனின் புதிய வெயிலும் நீலக்கடலும் நாவலின் கதைப் பின்னப்பட்டிருக்கிறது. நிதானம், எதையும் யோசித்து முடிவெடுப்பது, வாழ்க்கை பற்றிய புரிதலைக் கொண்டிருப்பது, நேர்மையாக இருப்பது என்ற பின்புலத்தில் அசோகராஜன் அடையாளப்படுத்தப்பட அவனது பண்புகளுக்கு நேர் எதிராக அவசரம், உணர்ச்சியின் உந்துதலினால் முடிவெடுப்பது, வாழ்க்கை பற்றிய போதிய அனுபவம் இன்மை, வாழ்க்கையை மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்ற சிந்தனை கொண்டவளாக லதா அடையாளப்படுத்தப்படுகிறாள். வாழ்வின் இரு எதிரெதிர் பண்புகளைக் கொண்டவர்களாக இவ்விருவரும் சித்தரிக்கப்பட்டிருப்பது போல இவர்களுக்கு இணையான பண்புகள் கொண்டவர்களாக மேலும் பல பாத்திரங்கள் நாவலில் இடம் பெற்றுள்ளன.

குறிப்பாக, பைரவன் சாமி என்கிற முனுசாமி - முனியம்மாள் (அசோகராஜனைவிட மேலான அறவாழ்வு வாழ்பவராகச் சுட்டப்படுதல்), தோழர் அய்யாவு, திருநாவுக்கரசு - சந்திரா போன்றவர்கள் அசோகராஜனுக்கு இணையானவர்களாக உள்ளனர். இவர்கள் வாழ்வில் குறிப்பிட்ட இலக்கைத் தேர்வு செய்துகொண்டு அந்த இலக்கை நேர்மையான வழியில் அடைய முயல்கின்றனர்.

இப்படித்தான் வாழ வேண்டும் என்ற எவ்வித குறிக்கோளும், வாழ்வின் மீதான பிடிமானமும் இன்றி மகிழ்ச்சியாக வாழ்ந்தால் போதும் என்ற நிலையில் வாழ்பவர்களாக லதாவின் தாத்தா வேலு, கோபால் - சுநய்னா, செல்வம் - மனைவி (மற்றும் மச்சினி), காவல்துறை உயர் அதிகாரியான சிவலிங்கம், தோழர் கண்ணகி - (கணவர் சின்னசாமி) - கந்தன், கோத்தாரி, கிருபாகரன் - மெகருன்னிகா என நீண்ட பட்டியல் நாவலில் இடம் பெற்றுள்ளது. இவர்களின் வாழ்க்கைக் குழப்பங்கள், பேராசைகள், சுயநலம் போன்றவை நிறைந்ததாக உள்ளது.

இரு எதிரெதிர் கருத்தியல்களைக் கொண்ட மனிதர்களின் வாழ்வைப் பற்றிய கதையாடல்களைக் கொண்டுள்ள இந்த நாவலில் சமகால வாழ்வின் எதார்த்தங்கள் பரவலாகப் பதிவாகியுள்ளதைப் பார்க்க முடிகின்றது.

“புதிய வெயிலும் நீலக் கடலும்” என்ற நாவலுக்குக் கொடுக்கப்பட்டுள்ள தலைப்பிலிருந்தே அதை உணர்ந்துகொள்ள முடிகின்றது. அதாவது, வெயில் என்பதன் முன்பு புதியது (ஆரம்பம் - வளர்ச்சி - நீட்சி) என்ற அடையும் கடல் என்பதற்கு முன்பு நீலம் (ஆழமான - அமைதியான - நிசப்தமான) அடையும் இந்த நாவல் வாழ்வின் இருப்புப் பற்றிய பிரதிபலிப்பை உணர்த்துகின்றன. கடலைப் பற்றிச் சொல்லுகிறபொழுது அலைகடல் அதன் ஆர்ப்பரிக்கும்தன்மை என்று இல்லாமல் நீலக்கடல் என்பது விரக்தியின் உச்சம்.

வெளிச்சம் புதியது. நிச்சயம் உதிக்கும் என்ற நம்பிக்கை. அந்த நம்பிக்கையை நோக்கிக் காத்திருக்கும் மக்கள். மாற்றங்களை எதிர்நோக்கும் மனம் என்பன போன்ற மனிதர்களின் எதிர்பார்ப்புகள் சாத்தியப்படுவது அல்லது ஏமாற்றங்களாய் அவை எஞ்சி நிற்பது. இது தான் வாழ்வின் எதார்த்தங்கள்.

சுருங்கக் கூறின், எதிர்காலம் பிரகாசமாக இருக்கும் என்ற நம்பிக்கை / எதிர்பார்ப்பைக் குறிக்கும் புதிய வெளிச்சம் என்பது ஒருபுறமும், மறுபுறம் எல்லாவற்றையும் மனதிற்குள் போட்டு அமுத்திக்கொண்டு வாழ்க்கையை எவ்வித எதிர்ப்பும் இன்றி (எதிர்ப்பதற்குத் துணிவின்றி) வாழ்ந்துவிட்டுச் செல்லுகிற (சலனமற்று) இன்றைய வாழ்வின் (தனிமனித, குடும்ப, சமூக, அரசியல் பின்னணி) எதார்த்தங்களை அறிய முடிகிறது.

**எதார்த்த மாதிரி - 1**

ஆண் - பெண் உறவு. கற்பு என்ற கருத்தியல். பாலினச் சுதந்திரம். பெண்ணை உடலாக மட்டுமே பார்ப்பது என்பன போன்ற சிந்தனை இன்று மோசமான நிலையில் உள்ளது. பெண்களுக்கு எதிராக கட்டவிழ்க்கப்படும் வன்முறை வரலாற்றில் சொல்லப்படாத அளவிற்கு இன்று எல்லை மீறிச் சென்று கொண்டுள்ளது. மக்களைக் காவல்துறையினர் பாதுகாப்பார்கள் என்ற நம்பிக்கை பொய்த்துப் போன ஒன்றாக இருக்கிறது. வாய்ப்புக் கிடைக்கும்போது அவர்கள் தங்களுடைய அதிகார துஷ்பிரயோகத்தை அரங்கேற்றுகிறார்கள். காவல் நிலையங்களில் கொலை, கற்பழிப்பு போன்ற சம்பவங்கள் சாதாரணமாக நடக்கும் விசயமாக உள்ளது. “வண்ணாத்திப்பெண் காவல் துறையினரால் கற்பழிக்கப்படுகிறாள். பத்திரிகையில் செய்தி வருகிறது. காவலர்கள் சிலர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

வழக்கு நடந்தது" (ப. 11). அவ்வளவுதான் அத்துடன் அந்தக் குற்றம் காணாமல் போகிறது. வசதியற்ற சமூகப் பின்னணிகொண்ட மக்களுக்கு எதிராக நடைபெறும் அத்து மீறல்களில் ஒரு துளியாக இதைப் பொதுத் தளத்தில் வைத்து பார்க்க முடியும். என்றாலும், காட்டுக்குள் சென்ற (அசோகராஜன்) புரட்சியாளர்களைத் தேடச் சென்ற இடத்தில் இந்தச் சம்பவம் நடப்பதாகச் சுட்டப்படுவதும், நாவலின் இறுதியில் தர்மபுரி வனப்பகுதியில் தோழர் அய்யாவு காவல்துறையினரால் கைது செய்யப்படுவதையும் இணைத்துப் பார்க்க, வனப்பகுதியில் சில ஆண்டுகள் தொடர்ந்து தீவிரவாதிகளைத் தேடுகிறோம் என்ற பெயரில் அரங்கேற்றிய காவல் துறையினரின் அத்துமீறலை குறிப்பதாகப் பார்க்க முடிகிறது.

**எதார்த்த மாதிரி – 2**

ஆணும் பெண்ணும் நண்பர்களாகப் பழகுவது என்பது இந்த சமூகத்தில் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று கல்வி, பொருளாதார மேம்பாடு, அறிவியல் வளர்ச்சி என்று எவ்வளவு தூரம் நாம் முன்னோக்கிச் சென்றாலும், இந்நிலையில் (பாலியல் புரிதல்) மாறவில்லை. மாறாகப் பின்னோக்கிச் சென்று கொண்டுள்ளோம் என்பதுதான் எதார்த்தம். அதிலும், புரட்சி - பெண்ணியம் என்று பேசுபவர்களும் அதற்கு விதிவிலக்கு அல்ல. எவ்வளவுதான் படித்து இருந்தாலும், அவர்களுடைய பார்வையும் பொதுப்புத்தியிலிருந்து விலகாத ஒன்றாக இருக்கிறது. இந்த எதார்த்தத்தைத் தோழர் கண்ணகி வாழ்க்கை உணர்த்துகிறது. "தோழர் கண்ணகி மிகவும் பிரபலமானவள். அவளுடைய கருத்தரங்குகள் அதிகம் புகழப்பட்டன. அவள் ஒரு சிந்தனாவாதி என்ற புகழ் பெற்றாள். அவளுடைய பங்களிப்பு தமிழ் சிந்தனை உலகிற்கு ஈடு இணையற்றதாக மதிக்கப்பட்டது" (ப.84) என்று பிரம்மாண்டமான பின்னணியில் பெண்ணியவாதியாக சமூக சீர்திருத்தவாதியாக முற்போக்குவாதியாக அடையாளப்படுத்தப்படும் அவள், "என்ன அசோக் எப்படி இருக்கீங்க சின்னப் பெண்ணா பார்த்துப் பிடித்து இருக்கீங்க போல இருக்கு" (ப.85) என்று லதாவையும் அசோகராஜனையும் இணைத்துப் பேசுகிறாள். அதுவும் லதா - கோபால் என்ற இளைஞனைக் காதலிக்கிறாள் என்ற செய்தியை அறிந்துள்ள பின்னணியில் அந்தப் பேச்சு அமைந்துள்ளது. மேலும், அவள் அசோகராஜனைச் சந்திக்க வந்ததன் நோக்கம் கண்ணகி என்ற கற்புக்கரசி பற்றிய ஆவணப்படத்தை எடுப்பது என்பது கவனிக்கத்தக்கது.

இந்த நிகழ்வுகளுக்குப் பின்னர் கண்ணகி தன் கணவன் சின்னசாமியை விட்டுவிட்டுக் கந்தன், கோத்தாரி என்று அடுத்தடுத்து வேறு சில ஆண்களைக் காதலர்களாகத் தேடிச் செல்கிறாள். ஒருகட்டத்தில் இரு காதலர்களும் (கந்தன், கோத்தாரி), கணவனும் ஒரு சேரக் கைவிடும் நிலையில், கணவனின் ஆஸ்திக்காக அவனிடம் சேர்ந்து வாழவேண்டும் என்று போராடுகிறாள். அதன் விளைவாக அவள் கையாலேயே அவளது கணவன் சின்னசாமி கொல்லப்படுகிறான்.

ஆண் - பெண் உறவு என்றாலே காதல்தான் என்று கருதுவதும். ஒன்றுக்கு மேற்பட்ட ஆடவருடன் இணைந்து வாழ்வது பெண்ணியம் என்பதுமான முரண்பட்ட வாழ்க்கை வாழ்பவராக இருக்கிறாள் கண்ணகி. ஒருபுறம் கண்ணகியின் கற்பு பற்றி உரக்கப் பேசுவது மறுபுறம் ஒழுக்கமற்று இருப்பது. புரட்சியைப் பற்றிப் பேசிக்கொண்டு மறுபுறம் கணவனிடமிருந்து செல்வத்தைப் பெற முயல்வதுமான பேச்சுக்கும் வாழ்க்கைக்கும் இடையிலான பெரிய அளவிலான இடைவெளி கொண்டவளாக அடையாளப்படுத்தப்படுகிறாள். கண்ணகியின் வாழ்க்கையைப் போலிப் பெண்ணியவாதிகளின் வாழ்வியலின் எதார்த்த சித்தரிப்பாகக் கருதலாம்.

### எதார்த்த மாதிரி – 3

கண்ணகிக்கு நேர் இணையாக சிவலிங்கம் என்ற காவல்துறை அதிகாரியைப் பார்க்கவேண்டியுள்ளது. ஏனெனில் அதிகாரத்தின் உயரத்தில் இருக்கும் அவர் தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி நிகழ்ச்சி தொகுப்பாளினி உள்ளிட்ட பல பெண்களோடு பாலியல் உறவிலிருந்திருக்கிறார். அன்பான அழகான மனைவி இருக்கிற சூழலில் அவருடைய அந்த நடத்தைச் சுட்டப்படுவது கவனிக்கத்தக்கது.

கண்ணகியும் சரி, சிவலிங்கமும் சரி பூக்கோ முதலான சிந்தனாவாதிகளை அறிந்தவர்களாகச் சுட்டப்படுவது வேடிக்கையான ஒன்று. அறிவு என்பது அதிகாரத்தை நோக்கி நகர்த்துகிறது என்ற அதிகாரத்தின் நுண்ணரசியல் குறித்தான கருத்தியலை முன்வைத்த பூக்கோவைப் படித்தவர்கள்கூட தம் அதிகாரத்தைத் தயக்கமின்றிச் செலுத்து கிறார்கள் என்கிற வாழ்வின் எதார்த்தத்தின் இரு புள்ளிகளாக இவ்விருவரின் வாழ்க்கையைப் பார்க்க முடியும்.

ஆண் பெண் என்ற பாலின வேறுபாடு இன்றி புரட்சி பேசும், பெண்ணியம் பேசும் நபர்கள் பெண்ணியத்திற்கு எதிராக - அதிகாரத்திற்குச் சார்பாக நடந்துகொள்ளுதல் என்று பேச்சுக்கும் வாழ்க்கைக்கும் இடையில் முரண்பட்டவர்களாக நடந்துகொள்கிறார்கள். இந்த அறிவாளிகள் கூட்டத்தின் எதார்த்த வாழ்வே இவ்விருவரின் கதையாடல்களில் வெளிப்பட்டுள்ளன. அதாவது, படித்தவர்கள் எல்லோரும் பண்பட்டவர்களாக மாறிவிடுவார்கள் என்று கருத்தியல் இங்குக் கேள்விக்கு உட்படுத்தப்படுகிறது. படித்தவர்கள்தான் திட்டமிட்டுத் தவறு செய்கிறார்கள். ஊழல், லஞ்சம் என்று சமூகத்தைச் செல்லரித்துக் கொண்டிருக்கிற அவலத்திற்குக் காரணம் படித்தவர்கள் என்பதும் அவர்களின் சுயநலம் என்பதும் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

### எதார்த்த மாதிரி – 4

பெண்களுக்குப் பெண்களே அதுவும் பெண்களின் முன்னேற்றத்திற்காக பாடுபடுகிறோம் என்ற போர்வையில் செயல்படும் பெண்களின் செயல்பாடுகள் சில வேளைகளில் மட்டும் செயல்படுகிறது. அதுவும் புகைப்படத்திற்கு போஸ் கொடுப்பதற்காக என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் அந்தக் கூட்டத்தின் செயல்பாடு பெண்களுக்கு எதிராக நடத்தப்படும் அதிகார வர்க்கத்தின் கண்மூடித்தனமான தாக்குதல்களுக்கு எதிராக மௌனித்துக் கிடக்கிறது. இதுதான் இன்றைய நிலை. கண்ணகி சிலைக்கு மாலை அணிவிப்பது. தமிழ் பாடல் பாடுவது. கண்ணகி புகழைப் பாடி பேசுவது. புகைப்படத்திற்கு மாலை அணிவிப்பது (ப.83) என உற்சாகமாக இருந்த கூட்டம் அதன்பிறகு காணாமல் போகிறது. பெண்ணியவாதிகள் என்று தங்களைக் கூறிக்கொள்ளும் நபர்களை பற்றிய பதிவாக இவற்றினைப் பார்க்கலாம். உதாரணத்திற்கு நடிகர் சிம்பு பாடிய இணையதளத்தில் மட்டுமே பார்க்க முடியும் என்ற நிலையிலிருந்த “பீப் சாங்“ என்ற பாடலுக்கு எதிராகக் கொதித்தெழுந்து திரண்ட மாதர் சங்கங்களின் எழுச்சி பெண்களுக்கு எதிரான தொடர்ந்து நடத்தப்பட்ட பல்வேறு வன்கொடுமைகளுக்கு எதிராக மௌனித்து நின்றதையும், அந்த மௌனம் காவல்துறையில் இருக்கும் பெண் உயர் அதிகாரிக்குத் தன் மேலதிகாரியால் கொடுக்கப்பட்ட பாலியல் தொந்தரவு வரை தொடர்ந்தன.

### எதார்த்த மாதிரி – 5

பாலியல் உறவு என்பது இரு எதிரெதிர் பாலினங்களுக்கிடையில் திருமணமான கணவன் மனைவி என்கிற நிலையில் நடக்கக்கூடிய ஒன்று என்பது சமூகத்தில் உள்ள நடைமுறை. அது சரியா அல்லது தவறா என்ற விவாதங்கள் ஒருபுறம் உண்டென்றாலும்,

அப்படி வாதிடுபவர்களும் கூட உறவு முறைகளை மீறி நடைபெறும் "கள்ளக் காதலை" ஏற்பதில்லை. குறிப்பாக, வளர்த்த மகளையே பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கும் தந்தை, மருமகளைப் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கும் மாமனார். மருமகன் - மாமியார் கள்ள உறவு, மனைவிக்குத் தெரியாமல் கணவன் இன்னொரு பெண்ணைக் காதலிப்பது, கணவனுக்குத் தெரியாமல் மனைவி இன்னொரு ஆடவனைக் காதலிப்பது என்பன போன்று நீளும் பாலியல் ஒழுங்கற்ற செயல்பாடுகளையும் நியாயப்படுத்துவதற்கில்லை.

ஒழுங்கற்ற பாலுறவை ஆண், பெண் என இரு பாலினமும் முழு மனதுடன் செய்தாலும், பாலின வன்முறையாக இருந்தாலும் இந்தச் சமூக அமைப்பு அதைப் புறக்கணிக்கும் என்பது உண்மை. குடும்ப அமைப்பு என்பது கணவன் மனைவி என்ற உறவில்தான் பாலியல் புணர்வு நடைபெறவேண்டும் என்ற நியதி தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகிறது. ஒருவேளை விருப்பம் இல்லை எனில் விலகிச் சென்று ஏற்ற நபரைத் துணையாக (ஆண் அல்லது பெண்) இருவரும் கொள்ளலாம் என்ற சிந்தனையும் சமூக சிந்தனையாளர்கள் முன்வைக்கப்பட்டு வருகிறது. என்றாலும், இந்த உறவு முறைகளுக்கு மாறான புணர்ச்சியைச் சமூக அமைப்பு ஏற்பதில்லை. அதை அனுமதிப்பதும் இல்லை. சமூகத்தில் இவ்வாறான உறவுமுறை மீறிய பாலுறவுகள் நடக்கவே இல்லையா? என்றால், நடக்கிறது என்பது தான் பதிலாக உள்ளது.

சிதைந்த குடும்பங்களின் ஒரு மாதிரியாக வேலு - மருமகள் (ராமுவின் மனைவி) ஒழுங்கற்ற பாலியல் உறவின் விளைவாக உள்ளது. விரும்பியோ (வேலு) விரும்பாமலோ (ராமு மனைவி) நடைபெற்ற மாமனார் மருமகள் இடையிலான உறவின் விளைவாக ராமு, சேகர், லதாவின் எதிர்காலம் நாசமாகிறது.

ஒருபுறம் மனநலம் அற்றவனாக்கிச் சோமுவின் வாழ்க்கையைச் சிதைத்து அழித்துவிடுகிறது. இரண்டாவது மகன் சேகரை ஒழுக்கம் அற்றவனாக விபச்சாரனாக மாற்றுகிறது. கடைசியில் லதாவையும் அந்தத் தாக்கம் விட்டுவைக்கவில்லை. ஓர் ஆணின் பாலியல் அதிகாரத்திற்கு அந்தக் குடும்பமே தண்டனை அனுபவிக்கிறது. உடல் இச்சையின் ஒழுங்கற்ற செயலால் குடும்பம் சிதைகிறது என்பதைக் காலம் கடந்து வேலு உணர்ந்தாலும், குடும்பத்தின் சிதைவை மீட்டமைக்க முடியாமல் போகிறது. குடும்ப உறவில் ஏற்படும் இத்தகைய ஒழுங்கற்ற பாலியல் உறவின் விளைவுகளைக் கேள்விக்குள்ளாக்குகிற கதையாடல்களாக வேலு - மருமகள், ராமு, சேகர், லதாவின் கதை நீள்கிறது.

### எதார்த்த மாதிரி - 6

பாலியல் ஒழுக்கம் என்பது வரலாற்றுக் காலம் தொட்டுப் பெண்ணை மையமிட்ட ஒன்றாகவே உள்ளது. நமது தொன்மை இலக்கியமான சங்க இலக்கியங்களில் "பரத்தையர் பிரிவு' என்ற நிலையில் பாலியல் ஒழுக்கம் அற்றவர்களாகப் பெண்கள் மட்டுமே குறிக்கப்படுவதும், சிலப்பதிகாரத்தில் கற்பு என்று சொல் கண்ணகி - மாதவி என்று இரு பெண்ணை மையமிட்டதாக இருப்பதும், அதன் தொடர்ச்சி இன்று வரை நீள்வதையும் சொல்லலாம்.

ஆணும் பெண்ணும் சமம் என்று உரக்கப் பேசிக்கொண்டிருக்கிற இன்றைய கால கட்டத்தில்கூட பேச்சளவில்தான் அது நிற்கிறதே ஒழிய, செயல்பாடு என்றளவில் அதன் இயல்பு இல்லாமல் போகின்றது. பெண் என்பவள் இன்றளவும் ஒரு பொருளாகவே கருதப்படுகிறாள். அவளுக்கென்று எவ்வித ஆசாபாசங்களும் விருப்பு வெறுப்புகளும் இல்லை.

இந்த நாவலில் ஒரு விவசாய குடும்பத்தில் இரண்டு குழந்தைகளையும் ஒரு வயதான பெண்மணியின் காக்கிற கடமை எதிர்நிற்கும் ஒரு பெண்ணை எதிர்கொள்ள வைத்தது.

“நிலம் காஞ்ச நிலம். விளைச்சல் இல்லை. அடகு வச்சேன். வட்டிதான் ஏறுச்சி. மெட்ராசு போய் பொழைக்கப் போனோம். வீட்டுக்காரர் கூலிக்குக் குழி வெட்டுற வேலை பார்த்தாரு. நான் வீட்டு வேலைக்குப் போனேன். அங்கே மட்டும் இன்னா வாழுது. வீட்டு முதலாளிங்க கையைப் புடுச்சி இழுக்கிறானுங்க. எல்லாத்துக்கும் உடம்பு தானே கேட்குது. வந்துட்டேன். வீட்டுக்காரர் ஒருத்திய வைச்சிகிட்டாரு. காசு தர்றதில்லை. எனக்கும் ரெண்டு குழந்தைங்க. படிக்குதுங்க. சாப்பிட என்ன செய்யறது. செலவுக்கு என்ன செய்யறது. பிச்சை எடுத்தாலும் காசு கிடைக்குமா. போச்சு. அதான் இந்தத் தொழில். ஈன வேலைதான். ஒவ்வொரு நாளும் செத்துடலாம்னு தோணுது. உசுரு மேல இருக்கிற ஆசை போகுமா. குழந்தைங்க முகமும் முன்னே வருது. ஒரு தடவை தவறிட்டேன். அதுக்குப் பிறகு எத்தனை தடவையோ. எல்லாம் முடிஞ்சது. அந்த நிலத்தை மீட்டுக் கொடுக்கிறதா கவர்மெண்டு சொல்லுது. கொடுக்குமா. என் பட்டினி போகுமா. இந்த கஷ்டம் தீருமான்னு தெரியல. மழை வேற இப்படிப் பெய்யுது. நிலம் இருந்தா சந்தோஷப்படலாம். இல்லாதவங்களுக்கு எல்லாம் ஒன்னுதான். இதோ பசியால் என் அம்மா துடிச்சுக் கிடக்குது. செத்துடும் மாதிரி இருக்கு. காலையில போய் தான் பன்னு வாங்கியாரனும்’ (ப.233)

இதுதான் கணவனால் கைவிடப்பட்ட ஏழைப்பெண்ணின் நிலைமை. ஆணையே சார்ந்திருக்கிற சூழலில் அவளது இயலாமை வாழ்க்கையின் தொடர் நெருக்கடிகள் அவளை அவளது உடலை முதலீடாகக் கொண்டு வாழ்க்கையை நகர்த்தும் அவல நிலை நோக்கி நகர்த்துகிறது.

**எதார்த்த மாதிரி – 7**

பெண் விடுதலை என்பது வெறுமனே பொருளாதார மேம்பாடு ஒன்றால் மட்டும் சாத்தியமாகும் என்பதையும் முழுமையாக ஏற்க முடியாது. சமூகக் கட்டமைப்பில் ஆண் - பெண் சமத்துவம் என்ற நிலைமை உருவாக வேண்டும். எப்பொழுது அது சாத்தியமாகுமோ அப்போதுதான் ஆணுக்கு நிகராகப் பெண் செயல்பாடு அமையும்.

எவ்வளவு படித்தாலும் பொருளாதார வலிமை பெற்றாலும் ஒரு பெண் தன்னுடைய வாழ்வின் எதிர்காலத்தை ஆணை சார்ந்து இருக்கவேண்டியதாகவே உள்ளது. பெண் ஆணைசார்ந்து இருக்கிற நிலையில் திருமண முறிவு (விவாகரத்து) என்ற ஒன்று நடந்த பிறகும் அந்த ஆணின் (கணவன்) அடக்கு முறையைச் சந்திக்க நேர்வது என்பது தொடர்கிறது.

கிருபாகரன் தன்னுடைய மனைவி மெகருன்னிகாவை விவாகரத்து செய்துவிட்ட நிலையிலும் அவள் இன்னொருவனைத் திருமணம் செய்து கொள்ளக்கூடாது என்று நிர்ப்பந்தம் செய்கிறான். “..அடி உதை. எத்தனை நாள் தாங்குவது. முடியவில்லை. சமூகமாகப் பிரிந்து விட்டோம். ஆனால் இன்னும் அவர் வந்து மிரட்டுகிறார் நான் யாரையும் திருமணம் செய்து கொள்ளக் கூடாது என்பது அவர் எண்ணம்” (ப,149) என்று மெகருன்னிகா கூறுவதிலிருந்து அதை நன்றாக உணர முடிகின்றது.

கல்லூரி பேராசிரியைப் பொருளாதாரத்தில் மேம்பட்டவள் என்ற நிலையில் இருந்தாலும், அவளுடைய எதிர்காலம் விவாகரத்து கொடுத்த கணவனின் கரங்களில் தொடர்வதாக நாவலில் சொல்லப்படுகிறது. கல்வியறிவும் பொருளாதார மேம்பாடும் தாண்டி சமூக விடுதலை என்பது பெண்ணுக்குத் தேவை. சமூகம் பெண்ணுக்கான இடத்தை தரவேண்டும்

என்ற எதிர்காலத்தை நோக்கிய எதிர்பார்ப்பை முன்வைப்பதாக இன்றைய சமூகத்தின் முழுமையான விடுதலை பற்றிய எதார்த்தமாக கிருபாகரன் - மெகருன்னிகா கதையாடலைப் பார்க்க வேண்டியுள்ளது.

### எதார்த்த மாதிரி – 8

முழுமையான பெண் விடுதலை என்பது உண்மையில் பெண்ணை போகப் பொருளாக பார்ப்பதிலிருந்து விலக்கி அவளை ஆணின் சரிபாதி(ஆண்-பெண்சமம்)என்ற நிலையில் பார்ப்பது எப்பொழுது சாத்தியப்படும்? என்ற கேள்விக்கான பதில் எதிர்காலத்திடம் தான் உள்ளது. என்றாலும், சமூகப் பொருளாதார அரசியல் என்ற நிலையில் சிலர் இன்று ஆண் - பெண் சமத்துவத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பது நடைமுறையில் உள்ள ஒன்றுதான்.

சிலரது வாழ்வில் பார்க்கக்கூடிய இத்தகைய வாழ்வின் போக்கை நாவலில் இரண்டு தன்மைகளில் காட்டப்பட்டுள்ளது. ஒன்று ஆன்மீக வாழ்க்கை. இன்னொன்று இல்லற வாழ்க்கை.

பைரவன் சாமி என்கிற முனுசாமி - முனியம்மாள் வாழ்க்கை ஆன்மீக வாழ்க்கையாக இதுவரைப் பார்த்தவற்றிற்கு நேர் எதிராகப் பாலியல் ஒழுக்கம் கொண்டதாகச் சித்திரிக்கப்படுகிறது. இவர்களின் வாழ்க்கை பரிபூரணமான ஒன்றாகப் புனிதமான ஒன்றாக உள்ளது. “என் மனைவி. என் தர்ம பத்தினி. எனக்கு மனைவியாகும்போது இவளும் ஒரு இயல்பான வாழ்க்கைதான் எதிர்பார்த்தாள். ஆனால் கடவுளுக்கு வாழ்க்கைப்பட்டது அவளுக்குப் பிறகுதான் தெரியவந்தது. என் திறம் அறிந்து, என் தீர்க்கம் அறிந்து எனக்கு மனைவியாக இருப்பவள் இவள். தாம்பத்தியம் என்பது புணர்வு வாழ்க்கை அல்ல என்று அந்தக் காலத்தில் அவள் உலகுக்கு உணர்த்தியவள். கன்னியாக இறக்கப்போகிறவள் என் தர்ம பத்தினி” (ப.191) என்று பைரவன் சாமியார் கூறுவதிலிருந்து இதை நாம் அறிந்துகொள்ள முடிகின்றது. என்றாலும், நடைமுறை வாழ்வில் இப்படிப்பட்ட ஒன்றை தேடிக் காண்பது சாத்தியமா? என்பது கேள்விக் குறியான ஒன்றுதான்.

இவ்வாறில்லாமல், காதலித்துத் திருமணம் செய்துகொண்ட திருநாவுக்கரசு - சந்திரா என்ற இருவரின் இல்லற வாழ்க்கை அறவியல் வாழ்வாக, எதார்த்தமான ஒன்றாகப்படுகிறது. நான்கு ஆண்டுகளுக்கு மேல் காதலர்களாக இருக்கிறார்கள். அதன்பிறகும் அவர்களுடைய மனங்களுக்கிடையே ஒத்த குணம் நிலையாக இருப்பதை உணர்கிறார்கள். எனவே அவர்கள் திருமணம் செய்துகொள்கிறார்கள் என்பதாகஅவருடையவாழ்க்கைஅமைகிறது. “பல வருடப் பழக்கம். புரிதல் இருக்கிறதா என்று யோசிக்க விரும்பினோம். இப்போது இருவருக்கும் இடையே ஆரம்பத்தில் இருந்த அதே அலைவரிசை இன்னும் இருக்கிறது” (ப.102) எனவேதான் திருமணம் செய்து கொள்கிறோம் என்று சந்திரா கூற்றும் அதில் உள்ள நேர்மையும் கணவன் மனைவி குழந்தைகள் என்ற இயல்பான அறவியல் வாழ்க்கையை நடத்துகிற சராசரி குடும்பத்தின் மாதிரியாக கொள்ளலாம்.

### முடிவுரை

பாலியல் ஒழுக்கக்கேடுகள் பற்றிய பல பரிமாணங்களை வண்ணாத்தி காவல்துறையினர் கற்பழிப்பு, தன் குழந்தைகளுக்காகவும், வயசான அம்மாவிற்காகவும் தன்னுடைய வாழ்க்கை பாலியல் தொழிலில் உட்படுத்திக்கொள்வது, சோமு மருமகள் கள்ள உறவு, குருடன் செல்வம் தன் மனைவி மச்சினி போதாது என்று லதாவிடம் அத்துமீறு முயல்வது, சேகர் பல பெண்களோடு தொடர்பில் இருப்பது, கோபால் - லதா - சுநய்னா - ஆசிரியை உடன் தொடர்பில் இருப்பது, சிவலிங்கம்

அன்பான மனைவி இருக்கையில் தொகுப்பாளினி உள்ளிட்ட பல பெண்களோடு தொடர்பில் இருப்பது, என நீளும் பாலியல் ஒழுக்கக்கேடுகள் நடக்கும் இடங்களில் எல்லாம் அரசியல் பொருளாதாரம் மையமாக நின்று செயல்படுவதை பார்க்க முடியும்.

பொருளாதார வலிமை இருப்பதால் (குருடனாய் இருக்கும் செல்வம், கல்லூரி இளைஞன் கோபால்), அதிகார வலிமை (சிவலிங்கம்), குடும்பத் தலைவன் (வேலு) ஆண் என்கிற ஆணவம் அரசியல் (அயல் மண்ணில் வசிக்கும் கிருபாகரன் தன்னுடைய இரண்டாவது திருமணத்திற்குப் பிறகும் முதலாவது மனைவி இன்னொரு திருமணம் செய்துகொள்ளக் கூடாது என்று நிர்ப்பந்திப்பது) என்று இந்த அதிகாரம் தனிமனிதன், குடும்பம் சமூகம் என்ற எல்லைகளைக் கடந்து பரவலாகப் பெண்களை அடக்கு முறைக்கு உள்ளாகி வருகிறது என்பதைக் கவனிக்க முடிகிறது. காதலித்துத் திருமணம் செய்துகொண்ட திருநாவுக்கரசு - சந்திரா என்ற இருவரின் இல்லற வாழ்க்கை வாழ்வு, எதார்த்தமான ஒன்றாகப்படுகிறது. இவர்களது வாழ்க்கை ஆண் - பெண் இடையிலான ஒழுக்கத்திற்கு அடித்தளத்தை நிர்ணயிக்கும் சக்தியாகத் தனிமனித, பொருளாதார, சமூக, அரசியல் சமத்துவம் என்பது எந்த அளவிற்கு அவசியம் என்பதையும் உணர்த்துகிறது.

**துணை நின்றவை**

1. நிஜந்தன், *புதிய வெயிலும் நீலக் கடலும்*, 2008 (முதல் பதிப்பு), சென்னை, காவியா வெளியீடு.
2. ராஜதுரை, எஸ். வி. 2011. *இருத்தலியமும் மார்க்சியமும்*, (முதல் பதிப்பு), கோயம்புத்தூர், விடியல் பதிப்பகம்.
3. சுரேஷ், எம். ஜி. 2017. *இஸங்கள் ஆயிரம்*, (முதல் பதிப்பு), புத்தாநத்தம், திருச்சி, அடையாளம் பதிப்பகம்.
4. சுரேஷ், எம்.ஜி. 2018. பால் மிஷெல் பூக்கோ அதிகாரத்தின் நுண் அரசியல், (இரண்டாவது மீளச்சு), அடையாளம் பதிப்பகம், புத்தாநத்தம்.